மருத்துவமனையில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து

# கரூரில் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆறுதல்!

## அரசின் நிவாரணத்தொகை தலா ரூ.10 லட்சத்தை வழங்கினார்!








கரூரில் த.வெ.க. கட்சித் தலைவரின் கூட்ட நெரிசலில் சிக்கி மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்த 40 பேரின் குடும்பத்திற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், தலா ரூ. 10 லட்சம் நிவாரண நிதிக்கான காசோலைகளை கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் வழங்கினர். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் மற்றும் அதிகாரிகள் அருகில் உள்ளனர்.

திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழக கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மைப்

# பட்டயப்படிப்பு மாணவர்களால் தமிழர்களின் தொன்மை கண்டுபிடிப்பு !

## பேராசிரியர் ச.இரவி தகவல்!

திருவாரூர், செப்.30-

திருவாரூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கித்தரப்பட்ட திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தில் தொல்லுயிர் புதைபடிம ஆராய்ச்சியில் கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மைப் பட்டயப்படிப்பு மாணவர்கள் ஈடுபட்டு அரிய ஆதாரங்களையு திரட்டி தமிழரின் தொன்மைகளை ஆய்வுக்கு கண்டுபிடித்துள்ளனர்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம் சமுதாயக் கல்லூரியின் கீழ் இயங்கும் கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மைப் பட்டயப்படிப்பைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மற்றும் , கல்வெட்டியல் பட்டயப்படிப்புப் பொறுப்பாசிரியர் பேரா.ச.இரவி மற்றும் பா. அருண் ராஜ், கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மைப்பேராசிரியர் இவர்கள் வழிகாட்டுதலில் அரியலூர், பெரம்பலூர் மாவட்டத் தொல்லுயிர் புதைபடிம மேற்பரப்பாய்வில் ஈடுபட்டனர்.

கீழப்பழுவூர், வாரணவாசியில் உள்ள அருங்காட்சியகப் பகுதியில் முதலில் தங்களுடைய மேற்பரப்பாய்வை மேற்கொண்டனர்.

மேற்பரப்பாய்வில் இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இடைக்கற்காலக் கருவிகள், இரும்புக் கருவிகள் தயாரிக்கின்ற பொழுது கிடைக்கப்பெற்ற இரும்புக்கசடுகள் மற்றும் 15 கோடி ஆண்டுகளுக்கு முன்பு கடல் பகுதியாக இருந்த இந்தப் பகுதியில் தொல்லுயிர் படிமங்கள் இருந்ததற்கான தடயங்களைக் கண்டறிந்தனர்.

அரியலூர் தமிழ்நாடு அரசு சிமெண்ட் ஆலை உள்ள கள்ளக்குறிச்சி சாலைப் பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்ட போது நூற்றுக்கணக்கான கிளிஞ்சல்கள், கடல் நத்தைகள், சுறா மீனின் தாடைப் பற்கள், சிப்பிகள், சங்குகள் மற்றும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கடல்வாழ் உயிர்களின் புதை படிமங்களைக் கண்டறிந்தனர். இந்தப் பகுதி பதினைந்து கோடி ஆண்டுகளுக்கு முன்பு சிப்பிகள் கூட்டம் கூட்டமாக இருந்த இடமாகக் கண்டறியப்பட்டது.

ஏற்கனவே இந்த மாவட்டங்களில் ஜுராசிக் கால 'டைனோசார்' மற்றும் 'டைனோசார் முட்டைகள்' மற்றும் கிரிட்டேசியஸ் கால 'அமோனைட்' உயிர் புதைபடிமங்கள் கண்டறியப்பட்டன. இந்தப் பகுதி 'தொல்லுயிர் விலங்குகளின் பூங்கா' என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

இதை அடுத்துப் 'புவியியல் ஆய்வாளர்களின் மெக்கா' என்று அழைக்கப்படுகின்ற பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 'சாத்தனூர் 'தொல்புதைபடிமங்களின் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.இதில் உலகிலேயே மிக உயரமாகக்(90அடி) கிடைக்கப்பெற்ற கல்மரம் மற்றும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்ற கடல்வாழ் தொல்லுயிர் படிமங்கள் எவ்வாறு கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு கல் படிமமாக மாறியது என்பது பற்றிய ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இதுபோன்று இன்னும் ஏராளமான கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லுயிர் புதைபடிமங்களை ஆய்வு செய்தால் அவற்றைக் கண்டறிய முடியும் என்பதற்கான அறிகுறிகள், தடயங்கள் இருப்பதைக் கண்டறிந்தனர்.

இந்த ஆய்வுகள் இன்னும் தொடக்க நிலையில் தான் இருக்கின்றன.

மேலும் இந்தப் பகுதிகளை ஆய்வுக்கு உட்படுத்துகின்ற பொழுது தொன்மையான டைனோசார், அமோனைட், கல்மரம், பூவாத் தாவரங்கள் இவை போன்ற ஆயிரக்கணக்கான தொல்லுயிர் புதைபடிமங்களைக் கண்டறிய முடியும். இவை பற்றிய ஆய்வை மேலை நாட்டினர் முன்னெடுத்துச் செல்லுகின்ற ஆர்வம் போல் நம்மிடம் இன்னும் அதிகரிக்க வேண்டும். இந்தத் தொல்லுயிர் புதைபடிமங்கள் ஆகிய பொக்கிஷங்களை, 13க்கும் மேற்பட்ட சிமெண்ட் தயாரிப்பதற்குப் பயன்படுத்துகிற சுண்ணாம்புக்கல் எடுக்கும்பொது அழியாமல் பாதுகாக்க வேண்டும் இவ்வாறு பேராசிரியர் ச.இரவி தெரிவித்துள்ளார்.

குன்றாண்டார் கோவில் ஒன்றிய முன்னாள் செயலாளர்

# கழக முன்னோடி க.ரெங்கராசு மறைவு!


## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.30-

கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஒன்றிய கழக முன்னாள் செயலாளரும், குன்றாண்டார் கோவில் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவரும், அண்டக்குளம் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவரும். அண்டக்குளம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவருமான கழக மூத்த முன்னோடி கரெங்கராக அவர்கள் நேற்று (28.09.2025) நண்பகல் 12 மணியளவில் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் க.ரெங்கராசு அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற, 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு திட்ட முகாமினை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு, முகாமில் உடனுக்குடன் தீர்வு காணப்பட்ட மனுக்களை ஆராய்ந்து மகாத்மா காந்தி 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகளுக்கு அடையாள அட்டையினை வழங்கினார்.




தருமபுரியில் 7 ஆம் ஆண்டு புத்தகத்திருவிழாவில் தி.மு.க. மேற்கு மாவட்ட மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் முனைவர். கவிதாமோகன்தாஸ் எழுதிய நூலினை முன்னாள் அமைச்சர் தருமபுரி தி.மு.க. மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் வெளியிட கவிஞர் மனுஷ்யபுத்திரன், கவிஞர்.அன்புதீபன் மற்றும் இயக்குநர்.கரு.பழனியப்பன் பெற்று கொண்டனர். விழாவில் முன்னாள்.எம்.பி.டாக்டர்.செந்தில், வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, வட்டாட்சியர்கள் மோகன்தாஸ், ராஜராஜன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.